DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**CC.No.46/2025**

**2026-**ம் ஆண்டு பிப்பரவரி திங்கள் **05-** ம் நாள்வியாழக்கிழமை குற்றம் முறைபிடுபவரின் அ**.**சா**.01 -**வது நபரின் வாக்குமூலம் **(1969** ஆம் ஆண்டு **54-**வது விதியின் ஏற்பாட்டின்படி**)** திருமதி**.**லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது**.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 01 | தொழில் | - | தலைமை காவலர் 1389 |
| பெயர் | - | திரு.சரவணன் | வட்டம் | - | பொள்ளாச்சி |
| த/பெ | - | ராமசாமி | சமயம் | - | |
| கிராமம் | - | டவுன் கிழக்கு காவல் நிலையம், பொள்ளாச்சி | வயது | - | 45/2026 |
| சாதி | - | | | | |

**<u>05-02-2026</u>**

**( எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது பொள்ளாச்சி டவுன் கிழக்கு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.07.2025-ம் தேதி மாலை 17.30 மணிக்கு ஷேக்கல்முடி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்த போது, நிலைய உதவி ஆய்வாளர் திரு. சுதாகரன் அவர்களுக்கு உதவியாக நானும், தலைமைக் காவலர் 1534 திரு.கார்த்திகேயன் ஷேக்கல்முடி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட சோலையார் டேம், சேடல் டேம், முருகாளி பஜார் ஆகிய பகுதிகளில் மதுவிலக்கு மற்றும் சூதாட்டம் சம்பந்தமாக கண்காணித்து வந்தபோது உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி 17.30 மணிக்கு சோலையார் டேம் இடது கரை விஸ்பரிங் பால்ஸ் அருகே கண்காணித்தபோது அங்கு கையில் பையுடன் நின்றுகொண்டிருந்த ஒரு நபர் போலீஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரிக்க தனது பெயர் அருண் (வயது 37), த/பெ.ராமலிங்கம் 17/1099, இடது கரை சோலையார் நகர், வால்பாறை எனக் கூறி தனது பையில் வைத்திருந்த சுமார் 180 மி.லி அளவுகொண்ட Vorion brandy என லேபிள் ஒட்டப்பட்ட 08 பாட்டில்களை ஆஜர்படுத்தி விசாரிக்க தான் சுயலாபம் கருதி அரசு அனுமதியின்றி விற்பனை செய்ய வைத்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை காரணம் கூறி 18.00 மணிக்கு உதவி ஆய்வாளர் கைது செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். பின்பு 18.300 மணிக்கு உதவி ஆய்வாளர் எதிரியிடமிருந்து தடய பொருள்களை கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்ய உதவியாக இருந்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான் **(அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் எதிரியுடன் 19.30 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண் 14/2025, ச/பி 4 (1) (C) TNP Amendment Act 2024 ன் படி உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். பின்னர் எதிரியை பாராவசம் ஒப்புவித்து தக்க இரு நபர் ஜாமீனில் விடுவிக்க உதவியாக இருந்தோம். பின்னர் தடய பொருட்களை 20.15 மணிக்கு ஷேக்கல்முடி காவல் நிலைய பின்புறம் வைத்து 08 பாட்டில்களில் இருந்த பிராண்டியை கீழே ஊற்றி அதில் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் அழிக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் அழித்தல் மகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான் **(அந்த அழித்தல் மகஜரில்**

**உள்ள 2-வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆககுறியீடு செய்யப்படுகிறது.)** வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. சம்பவயிடமான விஸ்பிரின் பால்ஸ் என்பது மெயின்ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். நேர் எதிரே வீடுகள் உள்ளது என்றால் இல்லை. விஸ்பரின் பால்ஸ் என்பது ஒரு தங்கும் விடுதி பெயர் என்றால் தெரியாது. ஷேக்கல்முடி காவல் நிலையத்திலிருந்து மளுக்கப்பாறை செக்போஸ்ட் வரை உள்ள ஒரு கிலோ மீட்டர் தூரம் இடது கரை என்று அழைப்பார்கள் என்றால் சரிதான். இடது கரையில் காவல் நிலையத்திலிருந்து சிறது தூரத்திலிருந்து இருபுறமும் வீடுகள் உள்ளது என்றால் விஸ்பிரின்ஸ் பால்ஸ்க்கு இருபக்கமும் சுமார் 500 மீட்டர் தூரத்திற்கு அப்பாள் இருபுறமும் வீடுகள் உள்ளது. இடது கரையில் விஸ்பிரின்ஸ் பால்ஸ் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் மளுக்கப்பாறை செக்போஸ்டிலிருந்து சுமார் 1/4 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. மளுக்கப்பாறை செக்போஸ்ட்டில் வனத்துறையை சார்ந்தவர்களும், காவல் துறையை சார்ந்தவர்களும் இருப்பார்கள் என்றால் சரிதான். அவர்களின் யாரையும் சாட்சியாக விசாரித்தோமா என்றால் சம்பவயிடத்திலிருந்து செக்போஸ்ட் 1/4 கிலோ மீட்டர் தூரத்தில் இருப்பதாலும், அங்கிருந்து ரோடு வளைவுப்பகுதியாக இருப்பதால் அங்கிருப்பவர்கள் சம்பவத்தை பார்க்க வாய்ப்பில்லை என்பதாலும் அவர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை. விஸ்பிரின்ஸ் பால்ஸ்க்கு அருகில் விஸ்பிரின்ஸ் பால்ஸ் என்ற பெயரில் உள்ள ஜெபராஜ் என்பவரின் தங்கும் விடுதியும் அதற்கு அருகில் வீடுகளும் உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக இல்லை என்று தவறாக சாட்சியமளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. எதிரி மீது மதுபானத்தை வைத்திருந்ததாக வழக்குபதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் விற்க வைத்திருந்ததால் பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் சொன்னது போல சம்பவம் நடந்திருந்ததால் அங்கிருந்தவர்களுக்கு தெரிந்திருக்கும் என்றால் அந்த சமயத்தில் அங்கு யாரும் இல்லை. எதிரியிடம் மதுபானத்தை விற்பனைக்காக வைத்திருந்ததாக ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். சம்பவயிடம் குறித்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். 3-ம் நபருக்கு எதிரி மது பானத்தை விற்பனை செய்யும் போது கையும் கலவுமாக பிடித்தோமா என்றால் இல்லை. எதிரி மீது தனி நபர் புகார் கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. எதிரியிடம் விற்பனை செய்து வைத்திருந்ததாக பணம் எதுவும் கைப்பற்றினோமா என்றால் இல்லை. வழக்கு சொத்தை வைத்திருந்ததாக பை என்ன நிறப்பை என்றும் அதை கைப்பற்றியதாகவும் போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த பையை கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். எதிரி அரசு மதுபானத்தை வைத்திருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் டாஸ்மாக் கடையில் வாங்கியவை என்றால் சரிதான். எந்த அரசு கடையில் வாங்கினார் என்பதை விசாரித்து அரசு மதுபானக்கடையில் உள்ளவர்களை சாட்சியாக இவ்வழக்கில் முன்னிடவில்லை என்றால் உதவி ஆய்வாளர் விசாரித்திருப்பார். டாஸ்மாக் கடையில் ஒரு நபருக்கு எவ்வளவு விற்கவேண்டும் என்று அளவீடு உள்ளதா என்றால் தெரியவில்லை. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்களில் மொத்த அளவான 1.240 லிட்டர் என்பது டாஸ்மாக் கடையில் ஒரு தனி நபருக்கு விற்கக்கூடிய அனுமதிக்கப்பட்ட அளவு என்றால் தெரியவில்லை. வரையறுக்கப்பட்ட அளவை விட ஒரு நபர் மதுபானத்தை தனது உடைமையில் வைத்திருந்ததாலும்,அல்லது விற்னைக்காக வைத்திருந்தாலும் குற்றம் என்றால் சரிதான். அரசு ஆணைப்படி ஒரு தனி நபர் தனது சொந்த உபயோகத்திற்கு 4.5 லிட்டர் மதுபானம் வைத்துக்கொள்ளலாம் என்றால் சரிதான். எதிரியை சம்பவயிடத்தில் கைதுசெய்து வழக்கு சொத்துக்களை கைப்பற்றி யிருந்தால் அங்கு உள்ளவர்களுக்கு தெரிந்துயிருக்கும் என்றால் சம்பவசமயத்தில் அங்கு யாரும் இல்லை. நான் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் எதிரியை கைதுசெய்யவில்லை என்றாலும் எதிரியிடம் இருந்து ஏந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. புள்ளிவிவரக் கணக்கிற்காக உயர் அதிகாரி

பதிவு செய்த வழக்கிறிக்கு வலுவூட்ட நான் தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும்சம்பந்தம் அல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.